# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஒக்டோபர் 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412 டிசம்பர் 10, 2019**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 ஒக்டோபர் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.1% இனால் அதிகரித்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 ஒக்டோபர மற்றும் 2018 ஒக்டோபர் மாதங்களில் முறையே 112.1 மற்றும் 110.8 எனப் பதிவாகியுள்ளது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) ஒரு குறிபிட்ட காலப்பகுதியில் தொழில் துறையில் உள்ள துணைத் துறைகளின் வளர்ச்சியை விவரிக்கும் ஒரு குறியீடாகும். இது தொழில்துறையின் உற்பத்தியின் அளவில் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உற்பத்திக் கைத்தொழில் துறைகளில் 20 தொழில் நிறுவனங்களில் 11 உற்பத்திகளின் உற்பத்தயில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது. 2018 ஒக்டோபர் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2019 ஒக்டோபர் மாதத்திற்கான 'மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்' 'கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்' மற்றும் 'மின் உபகரண உற்பத்திகள்' என்பனவற்றில் முறையே 32.5%, 28.0% மற்றும் 24.5% என குறிப்பிடக்கூடிய உற்பத்தி அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. அத்துடன் 2018 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் உணவு உற்பத்தியானது 4.0% ஆல் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஒக்டோபர் - 2019 | **112.1** |
| ஒக்டோபர் - 2018 | **110.8** |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) : **1.1** | |

கைத்தொழில் துறையின் உற்பத்தியின் அளவு மொத்தம் 9 கைத்தொழில்களில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது: 'ஏனைய உற்பத்திகள்' (மோட்டார் வாகன உற்பத்தி, பார ஊர்திகள், ஏனைய போக்குவரத்து சாதனங்கள், மற்றும் ஆபரணங்கள், என்பன அடங்கும்), 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள்' புகையிலை பொருட்கள் என்பன முறையே 28.9%, 23.2% மற்றும் 15.6% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

**2019ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.**